بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (*அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/12/2022 அன்று U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**காதியான் மற்றும் சில ஆஃப்ரிக்க நாடுகளில் துவங்கும் ஆண்டு மாநாடுகளை முன்னிறுத்தி ஈமான், நம்பிக்கை, கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வு ஆகியவற்றில் முன்னேறுவது குறித்து ஜமாஅத்தினர்களுக்கு அறிவுரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்றிலிருந்து காதியான் மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகளில் ஆண்டு மாநாடுகள் துவங்குகின்றன. ஒவ்வொரு நாட்டின் மாநாட்டையும் அல்லாஹ் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக! ஞாயிறு அன்று மாநாட்டின் கடைசி நாளில் காதியான் மாநாட்டை முன்னிருத்தி உரை நிகழ்த்தப்படும் இன்ஷா அல்லாஹ்! அதில் 7, 8 ஆப்பிரிக்க நாடுகளும் இணைந்துவிடும். இந்த அனைத்து நாடுகளையும் M.T.A மூலமாக ஒன்றிணைக்கவும் முயற்சி மேற்கொள்ளப்படும். எவ்வாறிருப்பினும், இப்பொழுது இந்த நாடுகளில் மக்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று கூடி குத்பா கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஆகவே, இந்த சூழ்நிலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சொற்களில், அன்னார் தம் வருகையின் நோக்கம் குறித்தும், ஜமாஅத்தின் நோக்கம் குறித்தும் எடுத்துரைத்துள்ள விஷயங்களை (உங்கள் முன்) எடுத்து வைப்பதை பொருத்தமானதாகக் கருதுகிறேன். அன்னார் பல்வேறு அறிவுரைகளை கூறியிருக்கிறார்கள். பல புதிய அஹ்மதிகளும், புதிய தலைமுறை அஹ்மதிகளும் இந்த மாநாடுகளில் கலந்து கொண்டிருப்பார்கள். ஆகவே, இந்நாட்களில் தமது ஈமான், நம்பிக்கை, கலப்பற்ற தன்மை, நன்றியுணர்வு ஆகியவற்றில் முன்னேறும் வகையில் முயற்சி மேற்கொள்வதற்காகவும், அல்லாஹ்வின் உதவியை வேண்டியவாறு, அன்னாரின் வருகை மற்றும் தம் பொறுப்புகளின் புரிதலை பெறுவதற்காகவும் அவர்களும் இவ்விஷயங்களை அறிந்து கொள்வது அவசியமாகும்.

**அஹ்மதிய்யா இயக்கம் நிறுவப்பட்டதன் நோக்கம் என்னவாக இருந்தது? இக்காலத்தில் இது நிறுவப்பட வேண்டிய அவசியம் என்னவாக இருந்தது? இவ்விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “இக்காலம் எவ்வளவு அருளுக்குரிய காலம் என்றால், குழப்பம் நிறைந்த இந்நாட்களில் இறைவன் தனதருளால்

இந்த அருளுக்குரிய நாட்டம் கொண்டான். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமையை வெளிப்படுத்துவதற்காக மறைவிலிருந்து இஸ்லாத்தின் உதவிக்கான ஏற்பாட்டை செய்துள்ளான்; ஓர் இயக்கத்தை நிலைநாட்டியுள்ளான். எவர்கள் தம் உள்ளத்தில் இஸ்லாத்துக்காக ஒரு வேதனையை கொண்டுள்ளார்களோ அவர்களிடம் நான் கேட்க விரும்புவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதும் இஸ்லாத்தின் மீதும் இந்த அளவு ஏச்சுப்பேச்சும், அவமதிப்பும் செய்யப்பட்ட காலம் இதற்கு முன் இஸ்லாத்திற்கு வந்துள்ளதா என்று அவர்கள் கூறட்டும்! இந்த அளவு ஏச்சுப்பேச்சு இருந்த போதிலும், இறைவன் ஏதேனும் வானத்தின் இயக்கத்தை நிலைநாட்டி, இஸ்லாத்தின் எதிரிகளுடைய வாயை மூடச்செய்து, பெருமானார் (ஸல்) அவர்களின் மகிமையையும், தூய்மையையும் உலகில் பரவச் செய்யும் வகையில் அல்லாஹ்விடத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியம் சிறிதளவு கூட இல்லையா என்ன? உண்மை என்னவென்றால், அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் அனுப்பி கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனை வெளிப்படுத்தும் வகையில் அல்லாஹ் இந்த இயக்கத்தை தோற்றுவித்துள்ளான்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட, இந்த இயக்கத்தில் இணைந்த நம்முடைய பொறுப்பு என்னவென்றால், நம்முடைய நிலைகளை சீர் செய்கின்ற அதே வேலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்தும் அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும். மேலும், இந்நாட்களில் குறிப்பாக ஸலவாத்தின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். நாம் அதிகமான அளவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் அனுப்பும்போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியம் மற்றும் மகிமையை நிலை நாட்டுவதற்கு எடுத்துரைத்த அந்த குறிக்கோளை பூர்த்தி செய்யக் கூடியவர்களாக நாம் இருப்போம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தம் வருகையில் நோக்கத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொலைந்து போன மகிமையை மீண்டும் நிலை நாட்டுவதற்காகவும், திருக்குர்ஆனின் உண்மைகளை உலகிற்கு காட்டுவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். இந்த அனைத்து பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் எவர்களின் கண்களில் திரை உள்ளதோ அவர்களால் இதைக் காண முடியாது. இப்பொழுது இந்த இயக்கம் சூரியனைப் போன்று பிரகாசமாக ஆகிவிட்டது. மேலும், இதன் சான்றுகள் மற்றும் அடையாளங்களுக்கு எத்தனை மக்கள் சாட்சிகளாக உள்ளார்கள் என்றால் அவர்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்தால் அவர்களின் எண்ணிக்கை எந்த அளவு இருக்கும் என்றால், முழு பூமியிலும் எந்த அரசருக்கும் இந்த அளவு படை (வீரர்கள்) கிடையாது.''

உலகின் பல்வேறு நாடுகளில் இன்று நடைபெறும் மாநாடுகளில் கலந்து கொண்டுள்ள ஆயிரக்கணக்கான அஹ்மதிகளும் இந்த அடையாளங்களில் ஓர் அடையாளம் ஆவர். **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "இந்த இயக்கத்தின் உண்மைக்கு எந்த அளவு அடையாளங்கள் உள்ளன என்றால், அவை அனைத்தையும் எடுத்துரைப்பதும் எளிதல்ல! இஸ்லாம் கடுமையாக அவமதிக்கப்பட்டுள்ளதனால், இந்த அவமதிப்பை கருத்தில் கொண்டவாறு அல்லாஹ் இந்த இயக்கத்தின் மகிமையை வெளிப்படுத்தியுள்ளான்."

பிறகு, **அன்னார் கூறுகிறார்கள்:** "இந்த காலமும் ஆன்மீக போரின் காலமாகும். ஷைத்தானுடன் போர் ஆரம்பித்துள்ளது. ஷைத்தான் தனது அனைத்து ஆயுதங்களுடனும், சூழ்ச்சிகளுடனும் இஸ்லாத்தின் கோட்டை மீது தாக்குதல் நடத்தி வருகின்றான். இஸ்லாத்தை தோல்வியுறச் செய்ய அவன் விரும்புகிறான். ஆனால், இறைவன் இப்போது ஷைத்தானுடனான இறுதி போரில் நிரந்தரமாக அவனைத் தோல்வியுரச் செய்வதற்காக இந்த இயக்கத்தை நிறுவியுள்ளான்."

ஆகவே, இவ்விஷயம் ஒவ்வோர் அஹ்மதிக்கும் அவரின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டுகிறது. **அன்னார் கூறுகிறார்கள்:** "எவர் இதனை அடையாளம் கண்டு கொள்கிறாரோ அவர் அருளுக்குரியவர் ஆவார். இப்பொழுது சிறிது காலம் மட்டுமே உள்ளது; இப்பொழுது நற்கூலி வழங்கப்படும். ஆனால், அல்லாஹ் இந்த இயக்கத்தின் உண்மையை சூரியனை விடவும் பிரகாசமானதாக ஆக்கி காட்டும் காலம் விரைவில் வர இருக்கிறது. அப்பொழுது ஈமான் கொள்வது நற்கூலிக்கு காரணமாக அமையாது! அத்துடன், (அப்போது) தவ்பாவின் கதவு அடைந்திருக்கும்."

இன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஒப்புக்கொள்ளக் கூடியவர்கள் நற்பாக்கியம் பெற்றவர்கள் ஆவர். அவர்கள், எதிர்ப்புகளை எதிர்கொண்டு அல்லாஹ்வின் நேசத்தை பெறக்கூடியவர்களாக ஆகிக் கொண்டிருக்கின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "ஒப்புக் கொள்வது மட்டும் போதுமானதன்று! மாறாக, ஒரு தூய மாற்றத்தை உருவாகுவதுதான் அசல் குறிக்கோளாகும். தூய ஏகத்துவத்தில் அடியெடுத்து வைக்கக்கூடிய மனிதனாக ஆக வேண்டும்! அப்பொழுது அல்லாஹ்வின் அருள் அதிகரித்துக் கொண்டே செல்லும். எவர் அல்லாஹ்விடம் அஞ்சியவாறு, அவனது வழியில் தேடித்திரிந்தவாறு முயற்சிக்கிறாரோ, துஆ செய்கிராரோ, وَ الَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا **எவர்கள் நம்மிடத்தில் முயற்சி செய்கிறார்களோ அவர்களுக்கு நாம் எமது வழிகளை காட்டிக் கொடுக்கின்றோம்** (திருக்குர்ஆன் 29: 70) என்ற தனது சட்டத்திற்கு ஏற்ப அல்லாஹ் அவருக்கு தன் வழியை காட்டிக் கொடுக்கின்றான். மனிதன் தூய உள்ளத்துடனும், உண்மையுடனும், அனைத்து தகாத வழிகளையும் தம்மீது மூடி விட்டு இறைவனுக்கு முன்னால் கையேந்தாத வரை, அல்லாஹ்வின் உதவியும் ஆதரவும் கிடைப்பதற்கு தகுதி பெற்றவனாக அவன் ஆவதில்லை.

மனிதனுடைய உள்ளம் எல்லாவித சுய நோக்கங்களிலிருந்து தூய்மையாகவும், பரிசுத்தமாகவும் இருப்பதை இறைவன் காணும் போது அவனுக்காக அருள்களின் கதவுகளை திறந்து விடுகின்றான். அவனை தனது நிழலில் கொண்டு வந்து அவனை பராமரிக்கக் கூடிய பொறுப்பை அவனே ஏற்றுக் கொள்கின்றான். அவனுடைய உள்ளத்தின் ஏதேனும் ஓர் ஓரத்திலும் ஷிர்க் மற்றும் பித்அத் ஆகியவற்றின் ஏதேனும் பங்கு இருக்குமென்றாலும் கூட அவனுடைய துஆக்களையும், இறைவணக்கங்களையும் அவன் முகத்தில் திரும்ப எறிந்து விடுகின்றான்.''

**ஸஹாபிகளின் முன்மாதிரியை தமதாக்கி, அவர்களைப் போன்ற கலப்பற்ற தன்மை, நன்றி உணர்வை உருவாக்குவதன் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகிறார்கள்:** ''இறைவன் இந்த இயக்கத்தை நிலை நாட்டியுள்ளான். இதற்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான அடையாளங்களை அவன் வெளிப்படுத்தியுள்ளான். இதன் மூலமாக, இந்த ஜமாஅத் சஹாபாவின் ஜமாஅத்தாக ஆக வேண்டும் என்பதும், மீண்டும் சஹாபிகளின் காலம் வந்து விட வேண்டும் என்பதும் இறைவனுடைய நோக்கமாக உள்ளது. எவர்கள் இந்த இயக்கத்தில் இணைந்து وَّ اٰخَرِيْنَ مِنْهُمْ இல் இணைகிறார்களோ அவர்கள் பொய்யான ஈடுபாடுகளின் ஆடையை கழட்டி விட வேண்டும். தமது அனைத்து கவனத்தையும் இறைவன் பக்கம் திருப்ப வேண்டும். இஸ்லாத்தின் மீது மூன்று காலங்கள் கடந்துள்ளன. ஒன்று, மூன்று நூற்றாண்டுகள் எனும் காலம். அதன் பிறகு கோணலான காலம். இதைக் குறித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், **அம்மக்கள் என்னைச் சார்ந்தவர்கள் கிடையாது; நான் அவர்களைச் சார்ந்தவன் கிடையாது** என்று கூறியிருக்கிறார்கள். மூன்றாவது காலம், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும். உண்மையில் இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலம் ஆகும். وَّ اٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ (திருக்குர்ஆன் 62: 4) என்பது தெளிவாக வெளிப்படுத்துவது என்னவென்றால், சஹாபாவின் மார்க்கத்திற்கு எதிராக உள்ள காலமும் வரும்! அதாவது, அவர்களின் செயல்கள் வேறுபட்டதாக இருக்கும். இந்த இடைப்பட்ட ஆயிரம் ஆண்டில் இஸ்லாம் மிகவும் கஷ்டத்திற்கும், சோதனைக்கும் இலக்காகி இருந்தது என்பதை சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன. மார்க்கம் சீர்குலைந்து கொண்டே சென்றது. சிலரைத் தவிர அனைவரும் இஸ்லாத்தை விட்டு விட்டார்கள். பல பிரிவுகள் உருவாகிவிட்டன.''

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''இப்பொழுது இறைவன் நாடியது என்னவென்றால், ஒரு பெரும் எண்ணிக்கையைக் கொண்ட கூட்டத்தை உருவாக்க வேண்டும். அது சஹாபாவின் கூட்டம் என்று அழைக்கப்பட வேண்டும். இறைவனுடைய இயற்கைச் சட்டம் என்னவென்றால், அவனால் நிறுவப்படும் இயக்கங்களில் படிப்படியாகத்தான் முன்னேற்றம் ஏற்படுகின்றது. ஆகவே, நம்முடைய ஜமாஅத்தின் முன்னேற்றமும் படிப்படியாக நிகழும். அதாவது, சாகுபடியைப்

போன்று. அதன் நோக்கங்களும், குறிக்கோள்களும் பூமியில் விதைக்கப்பட்ட விதையைப் போன்றதாகும். அல்லாஹ் கொண்டு சேர்க்க விரும்புகின்ற அந்த படித்தரங்களும், உயரிய நோக்கங்களும் இப்பொழுது வெகு தூரத்தில் உள்ளன. இந்த இயக்கத்தை ஏற்படுத்துவதற்கு இறைவன் என்ன நாடி இருந்தானோ அந்த சிறப்பம்சங்கள் உருவாகாதவரை அந்த நோக்கங்கள் கிடைக்கப்பெறாது. ஏகத்துவத்தை ஒப்புக் கொள்வது, இறை தியானம், சகோதரர்களின் உரிமையை செலுத்துவது ஆகியவற்றில் ஒரு குறிப்பான தன்மை உருவாக வேண்டும்.''

ஆக, இதுதான் நம்முடைய நோக்கமாகும். இதை பெறுவதற்காக நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் ஜமாஅத்தின் முன்னேற்றங்களையும் நாம் பார்க்க இயலும்!

**திருக்குர்ஆனை குறிப்பான கவனத்துடன், புரிந்து ஓத வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகிறார்கள்:** ''நினைவில் கொள்ளுங்கள்! திருக்குர்ஆன் முந்தைய வேதங்கள் மற்றும் நபிமார்கள் மீது பேருபகாரம் செய்துள்ளது. கதைகளாக இருந்த அவர்களின் போதனைகளை ஞானமாக மாற்றியது. நான் உண்மையாகவே கூறிக் கொள்கிறேன்! ஒருவர் திருக்குர்ஆனை ஓதாதவரை, இந்த கதைகளிலிருந்து இரட்சிப்பு பெற முடியாது. ஏனென்றால், திருக்குர்ஆனுடைய மகத்துவம் என்னவென்றால், அது தீர்ப்பு வழங்கக்கூடிய வேதமாக உள்ளது. நம்முடைய எதிரிகள் நம்மை எதிர்ப்பதில் இந்த அளவு ஏன் ஆவேசமாக உள்ளார்கள் என்றால், இறைவன் கூறியது போன்று நாம் திருக்குர்ஆனை, முழுக்க முழுக்க ஞானங்களின் ஒளியாகவும், இறை ஞானமாகவும் காட்ட விரும்புகிறோம். திருக்குர்ஆனை ஒரு தத்துவமாக கருதிக் கொண்டு அதிகமாக ஓதுங்கள்.''

ஆகவே, திருக்குர்ஆனின் பொருள்கள், சொற்பொருள்கள் மற்றும் விளக்க உரை ஆகியவற்றின் பக்கம் ஒவ்வோர் அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய பணி என்னவென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் அறிவுரைகள் படி செயல்பட வேண்டும். இது அவசியமான விஷயமாகும். இல்லை என்றால், பைஅத்திற்கு எந்த பயனும் கிடையாது.

**அன்னார் கூறுகிறார்கள்:** ''இப்பொழுது இந்நேரத்தில் நீங்கள் தவ்பா செய்துள்ளீர்கள்! இந்த தவ்பாவின் மூலமாக நீங்கள் உங்களை எந்த அளவு தூய்மைப்படுத்துகிறீர்கள் என்று இறைவன் இனிமேல் காண விரும்புகின்றான். தற்காலத்தில் ஆதம் (அலை) அவர்களின் துஆவை அதிகமாக ஓதுங்கள்! அந்த துஆ, رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا ۜ وَ اِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَ تَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ என்பதாகும். இந்த துஆ ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. கவனக்குறைவாக வாழ்வை கழிக்க வேண்டாம். எவர் கவனக்குறைவாக வாழ்வை கழிப்பதில்லையோ, அவர் அசாதாரண ஆற்றலைக் கொண்ட சோதனையில் சிக்கி விடுவார் என்று ஒருபோதும் நாம் எதிர்பார்க்க முடியாது. எந்த ஒரு சோதனையும் (இறை)கட்டளை இன்றி வருவதில்லை.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ **என்ற இந்த துஆ எனக்கு இல்ஹாமாக இறங்கியுள்ளது. இந்த துஆவையும் நீங்கள் ஓதி வாருங்கள்."**

**ஆகவே, ஷைத்தானிடமிருந்து தப்பித்தவாறு அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை எவ்வாறு மாற்ற விரும்பினார்களோ அவ்வாறு நாம் இருக்கிறோமா என்று உலகில் உள்ள ஒவ்வோர் அஹ்மதியும் சிந்திக்க வேண்டும். அவ்வாறு நாம் இல்லை என்றால், பிறகு ஒவ்வொரு நேரமும் அதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும்; துஆ செய்து வர வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!**

*ஹுஸூர் அவர்கள் இறுதியில், ஜாமிஆ அஹ்மதிய்யா யூ.கே வின் ஊழியரான மதிப்பிற்குரிய ஃபஸ்ல் அஹமது டோகர் சாஹிப், ரப்வாவில் ஜமாஅத் முரப்பியாக பணியாற்றிய மதிப்பிற்குரிய மன்சூர் அஹ்மது உமர் சாஹிப், கேம்பியாவின் முஅல்லிம் ஆகிய மதிப்பிற்குரிய ஈசா ஜோசஃப் சாஹிப் ஆகியோரின் மரணச் செய்தியை அறிவித்து, அவர்களின் நற்குறிப்பு மற்றும் ஜமாஅத் தொண்டுகள் பற்றிய குறிப்பை எடுத்துரைத்தவாறு ஜனாஸா தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ

ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**